அம்மம்மா அடைந்து விடுவோம் விடுதலை
அங்கங்கே பறக்க விடுவோம் கொடிகளை 2
மழலைகள் நாங்கள் இப்போது மாற்றுவோம் நாட்டை தப்பாது
நாளை இந்த கை கலந்த போரை வெல்லும் உறுதி

நாடாண்ட சாதியா நாடோடி சாதியா
நம் வந்த சாதி என்ன இனம் என்னவோ
வரலாற்றை பாருங்கள் யார் என்று கூறுங்கள்
வையத்தை ஆண்ட இந்த இனம் அல்லவோ
சரித்திரம் நாளை திரும்பிவரும்
சுதந்திரம் நாட்டில் அரும்பிவிடும்
பொறுத்தது போதும் எழுந்திருப்போம்
சிறுத்தையாக களம் புகுவோம்
தமிழர்களே தமிழர்களே தமிழர்களே

அம்மம்மா அடைந்து விடுவோம் விடுதலை
அங்கங்கே பறக்க விடுவோம் கொடிகளை

அதிகார பேய்களை வாலாட்டும் நாய்களை
இன்றே நம் நாட்டை விட்டு வெளியேற்றுவோம்
ஆறியாத பிள்ளைகள் அன்பான கிள்ளைகள்
போராட்டம் என்று வந்தால் புலியாகுவோம்
ஏரிமலை நாங்கள் வெடித்திடுவோம்
ஏதிரிகள் கோட்டை உடைத்திடுவோம்
பிறப்பது இங்கு ஒரு முறைதான்
இறப்பது இங்கு ஒருமுறைதான்
தமிழர்களே தமிழர்களே தமிழர்களே

அம்மம்மா அடைந்து விடுவோம் விடுதலை
அங்கங்கே பறக்க விடுவோம் கொடிகளை 2
மழலைகள் நாங்கள் இப்போது
மாற்றுவோம் நாட்டை தப்பாது
நாளை இந்த கை கலந்த போரை வெல்லும் உறுதி
அம்மம்மா அடைந்து விடுவோம் விடுதலை
அங்கங்கே பறக்க விடுவோம் கொடிகளை